www.tamilarangam.net

Tamil Welfare Association (Newham) U.K.

33A Station Road, Manor Park, London E12 5BP Tel/Fax: 0181-478 0577

Your Ref: Our Ref:

25.12.1996

அன்புடையீர்

வணக்கம்.

தமிழர் நலன்புரி சங்கம் கடந்த 10 ஆண்டுகளாக ஐக்கிய ராச்சியத்தில் வாழும், வந்து கொண்டிருக்கும் தமிழர்களின் சமூக, கலாசார நலன்களில் அக்கறைகொண்டு செயற்படும் அமைப்பு. அகதிகளுக்குத் தேவையான ஆலோசனைகள், உதவிகள் வழங்குவதோடு, கலாசார நிகழ்ச்சிகள் நடாத்துதல், சிறப்பு மலர் வெளியிடல் போன்றவற்றையும் மேற்கொண்டு வருகின்றது.

ஒவ்வொரு ஆண்டுவிழாவின்போதும் கலை நிகழ்ச்சிகளை நடத்துகிறது. 1996ஆம் ஆண்டு, உலகெங்கும் வாழும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளைக்கொண்ட சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டது. அது பரவலாகப் பலராலும் பாராட்டப்பட்டது.

இவ்வாண்டும் அத்தகையதொரு சிறப்பு மலரை, 1997 ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஆண்டுவிழாவில் வெளியிடவுள்ளோம். அம்மலரில் இரண்டு பகுதிகளாக ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என நினைக்கிறோம்.

1. புலம்பெயர் சூழலில் தமிழர்தம் வாழ்நிலை அநுபவங்கள்; எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சார்ந்த கட்டுரைகள்.

2. இலக்கியப் படைப்புக்கள்: சிறுகதை, கவிதை, ஓவியம், மற்றும் விமர்சனம், நிகழ்கலைகளைப் பற்றிய விவாதங்கள்.

எனவே, அத்தகைய படைப்புகளைத் தங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம். அவற்றினை பெப்ரவரி 1997 இறுதிக்குள் எமக்குக் கிடைக்குமாறு அனுப்பித்தரும்படி வேண்டுகிறோம்.

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள

இ. பத்மநாப ஐயர்

இ. பத்மநாப ஐயர்
மலர்க் குழுவுக்காக

TWAN

a company limited by gurantee, registered in England & Wales, number 2962857

Charity Registration No: 1047487

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்